கொடுத்தால் அதைத் துறைக்கு அனுப்பி ஆய்ந்து, உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பி, ஒப்புதல் பெற்று வாய்ப்பிருந்தால் அங்கீகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி இரா. பாண்டியம்மாள்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் ஃபேமிலி கோர்ட் எங்களுடைய அன்புத் தலைவி இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் எப்போது தொடங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டு ஜூன் மாதமே மதுரையில் ஒரு குடும்ப நீதிமன்றம் அதாவது ஃபேமிலி கோர்ட் அமைப்பதற்கு அங்கீகாரம் அளித்துவிட்டார்கள். அண்மையில் உயர்நீதிமன்றத்தோடு தொடர்பு கொண்டபோது வருகிற 16-4-1994 அன்று அதாவது இந்த மாதம் 16 ஆம் தேதி அன்று மதுரையில் ஃபேமிலி கோர்ட் தொடங்க உத்தேசித்திருக்கிறோம் என்ற தகவலை சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அளித்திருக்கிறார்கள். எனவே 16-4-1994 அன்று மதுரையில் ஃபேமிலி கோர்ட் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 162, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) அவருக்குப் பதிலாக திரு. தம்புசாமி கேட்கிறார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

162--

நில உச்சவரம்பின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலம் வழங்கப்பட்டும், பயனாளிகள் பயன் பெறாமை

19324-திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா ---

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் நிலஉச்சவரம்பில் நிலம் கையகப்படுத்தி தகுதியானவர்களுக்கு வழங்கப்படும் நிலத்தில் குறுக்கீடாகி பயனாளிகள் அனுபவிக்க முடியாது முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

1994 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நிலம் வினியோகம்) விதிகள் 1965-இன்படி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுக்கக்கூடிய உபரி நிலத்தைப் பொறுத்தவரையில் எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டதும் அல்லது விநியோகிக்கப்பட்ட பிறகும் கூட, அதுகுறித்து நீதிமன்றத்திற்குச் சென்று நீதிமன்றத்தால் வினியோகம் தடைப்படுகிறது. எனவே அந்த நிலம் யாருக்கு வழங்குவதற்காக அரசு எடுக்கிறதோ அவர்களுக்கு வழங்கப்படாமல் பல ஆண்டுகளாக வழக்குகள் தேங்கி இருக்கின்றன. அப்படி இருக்கிற வழக்குகள் நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எத்தனை வழக்குகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் அப்படி வழக்குகள் நடப்பதன்மூலம் அதில் கால தாமதம் ஆகும் என்ற காரணத்தால், இந்த அரசு வந்ததற்குப் பிறகு 'தமிழ்நாடு லேண்ட் ரிஃபார்ம் ஸ்பெஷல் அப்பெல்லேட் ட்ரிபுனல்' அதாவது தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தை இப்போது ஆரம்பித்து அதன்மூலமாக எல்லா வழக்குகளும் துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு வழக்குகள் என்ற கணக்கு என்னிடத்தில் இல்லாவிட்டாலும் இப்போது நீதிமன்றத்தில் அதிகமான வழக்குகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் உங்களுடைய நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால் அம்மாவட்டத்தில் திருவாரூர் வட்டம், செருநல்லூர் கிராமத்தில் நடராஜப்பிள்ளை என்பவர் வெள்ளாளர் ட்ரஸ்ட் என்பதை வைத்துக்கொண்டு 126.49 ஏக்கர் நிலத்தை வைத்திருந்தார். அது எடுக்கப்பட்டது. அவர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். அதுகுறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் திருவாரூர் வட்டம் திருநெய்ப்பர் கிராமத்தில் பிச்சமுத்து நாடார் என்பவரிடமிருந்து கைப்பற்றியிருந்த 91 ஏக்கர் நிலத்தைப் பொறுத்தவரையில் அவர் உச்சநீதிமன்றத்திற்குச் சென்றுள்ளார். ஆனால் உச்சநீதிமன்றத்திற்குச் செல்லக்கூடாது என்பதால் இன்றைக்கு 'தமிழ்நாடு லேண்ட் ரிஃபார்ம்

ஸ்பெஷல் அப்பெல்லேட் ட்ரிபுனல்' என்பதில் வழக்குகள் நடைபெறுகின்றன. விரைவில் தீர்ப்பு வரும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் நீடாமங்கலம் வட்டம் ஆதனூர் கிராமத்தில் 6 நபர்களிடமிருந்து 108 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டது. அது வினியோகிக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்டபின் அங்கே விதிமுறைகள் மீறப்பட்டதன் காரணத்தால் அந்த நிலம் திருப்பி அரசிடத்தில் மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள். அது நியாயமாக இருந்தால் திருப்பி அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல், குடவாசல் வட்டத்தில் திரு. கே. ஈ. எம். முகமது ஷெரீப் என்பவரிடத்திலேயிருந்து 7.45 ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இன்றைக்கு ஹைகோர்ட்டிலே இருக்கிறது. ஹைகோர்ட்டிலே முடிவெடுக்கப்படும். இப்போது காயிதே-மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதே நிலைதான். நாகப்பட்டினம் கீழையூர் கிராமத்திலே, வேதாரண்யம் சாதுக்கள் மடத்திற்குச் சொந்தமான நிலங்களில் 100.36 ஏக்கர் அளவுக்கு மொத்தம் ஐந்து வழக்குகள் தான் இருக்கின்றன. வேறு ஒன்றுமில்லை. உங்கள் மாவட்டத்தில் அந்த நிலம் முழுவதும் எடுக்கப்பட்டு தமிழ்நாடு லேண்ட் ரிஃபார்ம் கோர்ட்டிலே இருக்கிறது. விரைவில் தீர்ப்பு வரும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி, நீங்கள் குறுக்கே வந்தவர்தான். நீங்களே கேட்ட கேள்வி அல்ல. இது காயிதே மில்லத் மாவட்டம் பற்றியது. உங்களுக்கு அது பற்றிய விவரமே புரியாது. (குறுக்கீடு) அப்படிக் கேட்பதற்கு விதியிலே இடமில்லை, இரண்டாவது கேள்வி கேட்கமுடியாது.

வினா எண் 163, **டாக்டர் மு. காளிராஜன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

163--

மதுரை மருத்துவக்கல்லூரியில் பி. எஸ்.சி (செவிலியர் பயிற்சி) ஆரம்பித்தல்

***10389-டாக்டர் மு. காளிராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் பி.எஸ்.சி (செவிலியர் பயிற்சி) ஆரம்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?